சிவமயம்.

கள்ளிப்பட்டி சத்திரத்தில்,
திருக் கோயில் கொண்டெழுந்தருளிய

விநாயகர் பதிகம்.

இவை
முறட்டுப்பாளையம்
கணபதி, கந்தசாமிக் கடவுட்கு பூஜா
கைங்கர்யஞ் செய்யும்,
பழனியப்ப சுவாமிகளால்
இயற்றி

ஈரோடு
...ஸ் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.
1924

சிவமயம்.

கள்ளிப்பட்டி சத்திரம்
விநாயகர் தோத்திரப் பதிகம்.

—————:0:—————


காப்பு.

அருவா யுருவா யருவுருவாய் நின்ற
சரிமாமுகன் கழலே காப்பு,

அருசீர்க்கழில் நெடிலடி ஆசிரிய விருத்தம்.

நூல்.

சீர்கொண்ட ஆனைமுகம் ஐந்து கையுஞ்
சிறந்திடவே பாசமொடு மழுமானேந்தி
கார்கொண்ட திருமேனி துலங்கு மார்பா
காமாட்சி யீன்றெடுத்த கண்ணே பொன்னே
தார்கொண்ட மல்லிகையு முல்லை மாலை
தாவடங்கள் சூட்டியுனைத் தாழ்ந்து [illegible]
பார்கொண்ட கள்ளிநகர் தன்னில்வாழும் [illegible]
பரஞ்சுடரே கணபதியே [illegible] போற்றி.



அரகர சிவாயநம தேவாவென்று
ஆனைமுகா விநாயகனே யுந்தன்பாதம்
பரவிமிக அன்புகொண்ட குமாரசாமி
பாரியென்ற அங்கம்மாள் பக்திகொண்டு
உரிமையுடன் சிவனடியார் உகந்து வாழ்க
உண்மையுடன் சத்திரங்கள் உண்டுசெய்தும்
திருவிளங்குங் கள்ளிக்கோட்டை தன்னில் வாழுஞ்
சிவசிவா கணபதியே போற்றி போற்றி 2.

கலைமுற்றே மூர்த்திதலந் தீர்த்தமெல்லாங்
கண்டுதொழும் படிநினவுங் கனிந்த பக்தி
சிவனடியார் தங்குகின்ற மடமுஞ்செய்து
தினப்படிக்கு அடியாருக் கன்னமீய்ந்து
தவமிகுத்த அங்கம்மாள் மெய்யன்புக்குத்
தயவுவைத்து உன்பாத கமலந்தாரும்
புவனமுற்றுங் கொண்டாடுங் கள்ளிபட்டிப்
புனித கணபதிபாதம் போற்றி போற்றி. 3.

திரிபுரையா ளீன்றபரம் பொருளே யெல்லாத்
தேவர்களுங் கொண்டாடுஞ் சிவனார் பாலா
அறியாத சிறுபால னுனது பாதம்
அடிபணிந்து தோத்தரித்து னருளால்ச்சொன்ன

திருவிளங்கும் பதிகமது சிறப்புற்றோங்கத்
திருவடிக்கீழ் அடிமைசெய்வாய் அங்கம்மாளை
மறையவர்கள் சூழ்ந்திலங்குங் கள்ளிப்பட்டி
வசிய கணபதி பாதம் போற்றி போற்றி. 4.

அரியயனு மிந்திரனு முமையும் போற்ற
அவரவர்கள் குறைதீர்த்தாய் ஆதிமூர்த்தி
சிறியவன் யான் பழனிமலை மீதுங்கோவில்
செய்வதற்கா யுன்கிருபை புரிந்துமிக்க
பொருளுதவித் திருப்பணிகள் முடிப்பாய் சுவாமி
பூசையது முக்காலம் பொருந்தச் செய்வாய்
தருவுலவுங் கள்ளிநகர் தன்னில் வாழுந்
தந்திமுகா வுன்பாதம் போற்றி போற்றி. 5.

குருமுனியால் காவேரி வருகச் செய்தாய்
குஞ்சரனே அங்கம்மாள் கோவில்செய்ய
உறுதியொடு உள்ளமதில் நிறைந்து நின்றாய்
உன்பெருமை சொல்வதற்கு ஒருவருண்டோ
அருமறைகள் பரவுகின்ற பொருளே யென்னை
அடிமைகொண்ட ஐங்கரனே அருள்செய்திடுவாய்
திருவுலவுங் கள்ளிநகர் தன்னில்வாழுந்
தெய்வ கணபதி பாதம் போற்றி போற்றி 6.

கோபியெனுந் தாலூக்கில் சிறப்புற்றோங்கும்
குறிப்புடைய கொண்டையம்பாளையம் கிராமம்
தாபிதமாகிய கள்ளிப்பட்டி தன்னில்
தண்மையுள்ள குமரப்பக் கவுண்டன் பாரி
பாலமெல்லா மகன்றிடவே மடமுஞ் செய்தும்
பாலகளுக்கு பசியார அன்னமீய்ந்தும்
மாபெருமையான கணபதியின் கோவில்
வகுத்திருக்கும் அங்கம்மாள் வாழ்க மாதோ. 12.

கலிபிறந் தையாயிரத்து அறுநாங்குற்ற
கணக்கதனில் ருத்திரோற்காரி யாண்டில்
பலமதுற்ற விருச்சிக மாதந்தன்னில்
பழனிமலை வேல்முருகன் பக்தரான
உலகுபுகழ் குப்பய்ய சுவாமி சீடன்
உரைத்த கவி பழனியப்பன் உண்மையாகும்
நலமதுற்ற கள்ளிநகா தன்னில் வாழும்
நாயக ஓம் கணபதியே போற்றி போற்றி. 13.

கணபதி [illegible]
முற்றும்.

